Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com
Websites
Bahasa:
www.pengguna.org.my
English:
www.consumer.org.my
Chinese:
www.cap.org.my

பத்திரிகை செய்தி 3.4.2020

# பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர், பொருளாதார நிபுணர் மார்ட்டின் கோர் காலமானார்

மூன்றாம் உலகளாவிய நாடுகளின் நலன்களுக்கு போரடியவரும், பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த திரு மார்ட்டின் கோர், புதன் கிழமை காலமானார்.

ஜெனிவாவை தளமாகக் கொண்ட சர்வதேச தென் மையத்தின் தலைவராக மார்ட்டின் பணியாற்றி உள்ளார்.
இந்த மையம் ஏகாதிபத்திய பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் சக்திகளால், உலகளாவிய மேலாதிக்கத்திர்க்கு எதிராக, மூன்றாம் உலகின் நலன்களை ஊக்குவித்து பாதுகாக்கும் ஒரு மையம் ஆகும்.
இதற்கு இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தலைவராக இருந்தார். அவர் இந்தியாவிற்கு சென்றவுடன் மார்ட்டின் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இவருக்கு ஒரு மனைவியும், ஒரு மகளும் உள்ளனர். இவருடைய மனைவி, மலேசிய மண்ணின் தோழர்கள் கழகத்தின் தலைவி மீனாட்சி ராமன் ஆவார். மார்ட்டின் ஒரு அறிவு ஜீவி. மக்களின் பிரச்சினைகளை மிக எளிதாக கையாளக்கூடிய திறமை வாய்ந்தவர்.

கோம்ரேட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து, பிறகு, சிங்கப்பூர் நிதி அமைச்சில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்.
மறைந்த பி.ப.சங்கத்தின் தலைவர் முகம்மது இட்ரிஸ் அவர்களுடன் இணைந்து, பி.ப.சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டார்.
பயனீட்டாளர் சங்கங்கலுக்கு ஒரு முன்மாதிரியாக தோன்றினார்.
அவருடன் பணியாற்றுவதற்க்கான வாய்ப்பை பெற்ற உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற ஆர்வலர்களுக்கு அவர் வழிகாட்டினார்.

சில ஆண்டுகளாக, புற்றுநோய்க்கு எதிராக போராடிய அவர் தனது 69 வயதில் மரணம் எய்தினார்.

என் வி சுப்பாராவ்
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்